# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 01 - 2017

- புலித்தேவன் 302-வது பிறந்த தினம் செப்டம்பர் - 01.
  திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி அருகே நெல்கட்டும்செவலில் விடுதலைப்போராட்ட வீரர் புலித்தேவனின் பிறந்த நாள் விழா ஆண்டு தோறும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

- சிங்கப்பூர் நாட்டில் 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிபர் தேர்தல் நடக்கிறது. தற்போதைய அதிபர் டோனி டானின் பதவிக்காலம் ஆகஸ்ட் 31 உடன் முடிவடைந்தது. செப்டம்பர் 23-ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதுவரை இடைக்கால பிரதமராக இந்திய வம்சாவளி தமிழர் திரு.ஜோசப் யுவராஜ் பிள்ளை பதவியேற்றுள்ளார்.

- இந்தியாவுக்கான புதிய அமெரிக்க தூதராக சர்வதேச பொருளாதார உதவிகள் மற்றும் இந்திய விவகாரங்களின் நிபுணரான "கென்னத் ஜஸ்டர்" நியமிக்கப்பட்டுள்ளார்.

- பிரதமர் மோடி மற்றும் சுவிஸ் கூட்டடைப்பு தலைவர் டோரிஸ் லூதர்ட் ஆகியோரிடையே இரயில்வே துறையின் ஒத்துழைப்பு தொடர்பாக இந்தியா, சுவிட்சர்லாந்து இடையே இரு ஒப்பந்தங்களில் புதுடெல்லியில் கையெழுத்திட்டுள்ளனர்.
  சுவிஸ் வங்கியில் இந்தியர்கள் வங்கிக்கணக்கு குறித்த தகவல்கள் அடங்கிய முதல் தொகுப்பு 2019-ம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவிடம் அளிக்கப்படும் என்று சுவிட்சர்லாந்து அதிபர் தெரிவித்தார்.

- புது டில்லியில் ராஜஸ்வா கியான் சங்கத்தின் வருடாந்திர மாநாடு செப் 1-ல் நடைபெறுகிறது. பிரதமர் மோடி இதனை தொடங்கிவைக்கிளார். இந்த மாநாட்டை மத்திய நேரடி வரிகள் வாரியம் மற்றும் மத்திய சுங்க வாரியம் ஆகியவை இணைந்து நடத்துகின்றது.

- தனியார் பள்ளிகள் தவிர்த்து மாநிலம் முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் பெண்களுக்கு பட்டப்படிப்பு வரை இலவச கல்வியை கர்நாடகா வழங்கவுள்ளது.

- நிதி சேவைகள் துறையின் தலைவராக அஞ்சுலி சிப் துக்கள் இருந்தார். நிதி சேவைகள் துறையின் புதிய செயலராக ராஜிவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் இவர் மக்கள் குறைதீர் அமைச்சகத்தின் நிறுவன அலுவலர் மற்றும் சிறப்பு செயலராக பணியிலுள்ளார்.

- நடுவண் இடைநிலைக்கல்வி வாரியத்தின் புதிய தலைவராக அனிதா கர்வார் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் இருந்த ராஜேஷ்குமார் சதுர்வேதி தேசிய திறன் மேம்பாட்டு முகமைக்கு மாற்றப்பட்டதால் அனிதா இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- நேபாளத்தில் "பன்னாட்டு இந்து மாநாடு-2017" ஆகஸ்ட் 31 அன்று நடைபெற்றது. மாநாட்டின் மையக்கருத்து "Emerging spiritualism: Renaissance of Hinduism". இதன் நோக்கம் காத்மாண்டுவை இந்து மதத்தின் உலகலாவிய தலைநகரம் ஆக்குதல்.

- மத்திய அரசு "அந்தாரா, சய்யா" என்ற இரண்டு கருத்தடை மருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் அந்தாரா மருந்து ஊசி மூலம் உட்செலுத்தக்கூடியதும், சய்யா மருந்து மாத்திரை வடிவில் உட்கொள்ளக் கூடியதும் ஆகும். மத்திய அரசின் 'பரிவார் விகாஸ்' திட்டத்தின் கீழ் இந்த மருந்துகள் மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், மத்தியபிரதேஷ், ராஜஸ்தான், கர்நாடகா, ஹரியாணா, மேற்கு வங்கம், ஒடிஸா, தில்லி, கோவா ஆகிய மாநிலங்களில் முதல்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- 'டிரான்ஸ்பேரனசி இண்டர்நேஷனல் (டி.ஐ) என்ற அமைப்பு 16 ஆசிய பசிபிக் நாடுகளில் ஊழல் நிலவரம் குறித்த ஆய்வு நடத்தியது. இந்த பட்டியலை அமெரிக்காவின் "போர்ப்ஸ்" பத்திரிக்கை வெளியிட்டது. இந்த பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதற்கடுத்து வியட்நாம், தாய்லாந்து, பாகிஸ்தான், மியான்மர் ஆகிய நாடுகள் உள்ளன.

OXFORD IAS ACADEMY